OS 49/2021

வா.சா. 1 பாலமுருகன் த/பெ சுந்தரம்

நாள் 16.12.2024

முதல் விசாரணை தொடர்ச்சி

1. என் தரப்பில் ஏற்கனவே முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 14 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு உள்ளது. தற்போது என் தரப்பில் கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் 19.01.2015 தேதியிட்ட உத்தரவாத கடிதத்துடன் கூடிய உடன்படிக்கை ஒளி நகலை வைத்துக்கொண்டு அசல் உடன்படிக்கையை பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன். அதன்படிக்கு 19.01.2015 தேதியிட்ட உத்தரவாத கடிதத்துடன் கூடிய உடன்படிக்கை அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக்கோரி IA1/2023 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தேன்.

2. அந்த IA1/2023 மனுவானது 25.04.2024 அன்று அனுமதிக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் 19.01.2015 தேதியிட்ட அசல் உடன்படிக்கை ஆவணத்தை ஆஜர் படுத்த காலம் வழங்கப்பட்டது ஆனால் 20.09.2024 தேதி வரையில் மேற்படி 19.01.2015 தேதியிட்ட அசல் உடன்படிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. அதன்படிக்கு தற்போது 19.01.2015 தேதியிட்ட உடன்படிக்கை நகல் தாக்கல் செய்கிறேன். அந்த 19.01.2015 தேதியிட்ட உடன்படிக்கை நகல் **வா.சா.ஆ 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.